KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.45

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

எஸ். ராமகிருஷ்ணன் பயண இலக்கியங்களில் ‘இரவு’

'Night' in S. Ramakrishnan's Travel Literature

Dr. Bharathi Prakash. S[1,*iD]

[1] Assistant professor, Tamil Department, PSG College of Arts and Science, Coimbatore,Tamilnadu.
***Corresponding author:** Dr. Bharathi Prakash. S, bharathiprakaash@gmail.com
ORCID iD: Dr. Bharathi Prakash. S https://orcid.org/0000-0001-8480-9824

ARTICLE INFO

Article history
Received: 25 September 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026
Published: 01-11-2026

Article ID
KIJTS-2026-0014

Peer review
Double-blind peer review

Keywords
Tamil literature
travel literature
எஸ். ராமகிருஷ்ணன்
S Ramakrishnan's Travel Literature

ABSTRACT

In Tamil literature, 'Night' is portrayed not merely as a shift in time, but as a profound expression of human emotions and a symbol of a life lived in harmony with nature. In travel literature, night cannot be defined simply as a span of time; it often marks an interlude in a long journey. While daytime travel focuses on external vistas mountains, rivers, roads, buildings, people, and other living beings night compels the traveler to turn their gaze inward. The solitude experienced while sitting in an unfamiliar land amidst the darkness, the longing for one's own country, city, or hometown, and the emergence of philosophical reflections elevate the prose of travel literature to a new dimension. Certain works of Tamil literature subtly illustrate how the solitude and silence of the night turn against the characters. Ultimately, in Tamil literature, the night is not merely darkness; it is a nuanced symbol of life that encompasses everything.

How to cite this article: Dr. Bharathi Prakash. S (2026). எஸ். ராமகிருஷ்ணன் பயண இலக்கியங்களில் ‘இரவு’. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 1–10.
https://doi.org/10.63300/kijts603112026.45
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர். பாரதிபிரகாஷ், ச.

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு.

மின்னஞ்சல் முகவரி : **bharathiprakaash@gmail.Com**, ORCID : 0000-0001-8480-9824

தமிழ் இலக்கியங்களில் 'இரவு' என்பது பொழுது மாற்றமாக மட்டுமின்றி, மனித உணர்வுகளின் வெளிப்பாடாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கையோடு இயைந்த வாழ்வியல் குறியீடாகவும் அகம் புறம் சார்ந்த உணர்வுகளை, வெளிப்

படுத்தும் நுட்பமான உத்தியாகவும் அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் இரவு (யாமம்)முல்லை, நெய்தல் நிலங்களுக்குரிய சிறுபொழுதாகக் குறிப்பிடப் படுகிறது. திருக்குறள் இன்பத்துப்பாலில் இரவு நேரம் தலைவன் தலைவியை எவ்வாறு வதைக்கிறது என்பதை வள்ளுவர் தனி அதிகாரங்களாகப் பாடியுள்ளார். சிலப்பதிகாரத்தில் கோவலன் பிரிந்திருந்த போது, கண்ணகி மாலை, இரவு நேரத்தில் அடைந்த துயரத்தை இளங்கோவடிகள் நுட்பமாக விவரிக்கிறார். கம்ப ராமாயணத்தில் இராமன் சீதையைப் பிரிந்தபின்பு, இரவின் கொடுமையையும் நிலவின் ஒளியைக் கண்டு அது தன் உடலை எரிப்பது போல உணர்வதாகவும் கம்பர் காட்சிப் படுத்துகிறார். பக்தி இலக்கியத்தில் இரவு என்பது இறைவனை அடையும் ஆன்மீக அமைதியின் குறியீடாக விளங்குகிறது. சிற்றிலக்கியங்களில் இரவு பற்றிய வருணனை செய்திகள் தனித்த இடம் பெறுகின்றன. நவீன இலக்கியங்களில் (கவிதை, சிறுகதை, நாவல், நாடகம்) இரவின் பன்முகப் பரிமாணம் நுட்பமாக விவரிக்கப் பட்டுள்ளது. இரவு என்பது, நகர வாழ்க்கையின் கொண்டாட்டம், மகிழ்ச்சி, இருண்ட பக்கங்கள், மனிதர்களின் ரகசிய முகங்கள், முரண்கள், மர்மம், மக்களின் வறுமை, ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு களமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இரவு என்பது வெறும் இருள்/ இருட்டு மட்டும் அல்ல. அது அன்பு, காதல், காமம், துரோகம், பிரிவு, தனிமை, பயம், பாதுகாப்பின்மை, வறுமை, ஆன்மீகம், தத்துவம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய நுட்பமான வாழ்வியல் குறியீடாகும்.

பயண இலக்கியங்களில் இரவு

இரவுச் சுற்றுலா (NocturnalTour (அ) Night Tour) என்பது சூரிய மறைவிற்குப் பிறகு, இரவு நேரத்தில் ஒரு இடத்தின் இயற்கை எழில், வனவிலங்குகள், வரலாறு அல்லது நகர வாழ்க்கையை அறிந்து கொள்ள முயலும் தனித்துவமான சுற்றுலா வடிவம் ஆகும். பகல் நேரத்தில் பார்க்க முடியாத பல சுவாரசியமான விஷயங்களை இரவில் மட்டுமே பார்க்கவும் உணரவும் முடியும் என்பதே இதனுடைய முக்கிய சிறப்பம்சமாகும். இது நீண்ட பயணத்தின் இடையே வரும் இரவுப்பயணம் என்பதுடன் வேறுபட்டதாகும்.

பயண இலக்கியங்களில் இரவு என்பது பெரும்பாலும் நீண்ட பயணத்தின் இடைவேளையாக வருவதாகும். எனவே, இரவினை ‘பொழுது’ என்று மட்டும் குறிப்பிட்டு கடந்து போக இயலாது. மலைச்சரிவு, காடு, ஆற்றங்கரை, வயல்வெளி, திறந்தவெளி, பாலைவனம் என வெவ்வேறு இடங்களில் பதிவு செய்யப்படும் இரவுப் பதிவுகள் வாசகனுக்கு புதுவிதமான உலகை அறிமுகப்படுத்துகின்றன. பயண இலக்கியப் பதிவுகளில் அறியாத கிராமம், நகரம், நெடுஞ் சாலைகளில் இரவைக் கழிக்கும் போது ஏற்படும் பயம், மர்மம், ஆர்வம், திகைப்பு, எதிர்பார்ப்பு, மற்றும் அமைதி ஆகியவை விவரிக்கப்படுகின்றன. மேற்கண்ட அனைத்தும், பயண இலக்கியப் படைப்பாளரின் மனவோட்டத்தையும், குறிப்பிட்ட இடத்தின் அழகையும் வெளிப்படுத்தும் ஒரு கலை வடிவமாகக் காட்சி அளிக்கிறது.

பகல் நேரப் பயணம் என்பது வெளிப்புறக் காட்சிகளை (மலைகள், ஆறுகள், சாலைகள், கட்டிடங்கள், மனிதர்கள், பிற உயிரினங்கள்) நோக்கியதாக இருக்கும்.

இரவு என்பது பயணியைத் உள்நோக்கிப் பார்க்க வைக்கும். இருள் சூழ்ந்த இரவில், அறிமுகமில்லாத ஒரு தேசத்தில் அமர்ந்திருக்கும் போது ஏற்படும் தனிமை, தனது சொந்த வாழிடம் (நாடு, நகரம், ஊர், வீடு) சார்ந்த ஏக்கம் மற்றும் தத்துவார்த்தச் சிந்தனைகள் பயண இலக்கியத்தின் உரைநடையை அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்கின்றன.சுருக்கமாகக் கூறின், பகல் ஒரு தேசத்தின் நிலப்பரப்பையும் நிலவியலையும் வரலாற்றையும் காட்டுகிறது என்றால், இரவு அந்தத் தேசத்தின் ஆன்மாவையும் பயணியின் அக உணர்வையும் பிரதிபலிக்கிறது எனலாம்.

எஸ். ராமகிருஷ்ணனும் பயண இலக்கியமும்

உலகெங்கும் 2000 க்குப் பின்பு ஏற்பட்ட இணைய வளர்ச்சி, சமூக ஊடகங்களின் வளர்ச்சி காரணமாக உரைநடை இலக்கியம் எழுதுவோர், வாசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. மக்கள், பிற மொழியில் எழுதப் பட்ட சிறந்த அறிவியல் நூல்களையும் உரைநடை இலக்கியங்களையும் நேரடியாகவும் தமிழில் மொழி பெயர்த்தும் கற்கத் துவங்கினர். இது தமிழில் உரைநடை இலக்கியம் மேலும் வளர உதவியது. தமிழின் நவீன உரைநடை இலக்கியத்தை வளம் பெறச் செய்தவர்களில் எஸ், ராமகிருஷ்ணன் குறிப்பிடத் தக்க படைப்பிலக்கிய எழுத்தாளர் ஆவார். இவர், புதினங்கள், சிறுகதைகள், திரைக்கதை, திரைப்படஉரையாடல்கள், திரைப்படக் கட்டுரைகள், பயணக்கட்டுரைகள், நாடகங்கள், குழந்தை இலக்கியங்கள், உள்ளிட்ட பல்துறைப்படைப்புகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர். 2018 ஆம் ஆண்டு *சஞ்சாரம்* என்ற புதினத்துக்காக, *சாகித்திய அகதெமி விருது* பெற்றுள்ளார். இவருடைய பயணநூல்களுள் 'தேசாந்திரி' குறிப்பிடத்தக்க பயண இலக்கியப் படைப்பு ஆகும். 'இலக்கற்ற பயணி', 'எனது இந்தியா', 'மறைக்கப்பட்ட இந்தியா' ஆகியவை இவருடைய பயணம் சார்ந்த பிற நூல்கள் ஆகும்.

எஸ். ராமகிருஷ்ணனின் பயணப்பதிவுகளில் இடம், மனிதர்கள், மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் ஆகியவை மையப் பொருண்மைகளாக அமைகின்றன. அவரது பயணப் பதிவுகள் நிலப்பரப்பின் பண்பாட்டுக் கூறுகளையும் மக்களிடையே உள்ள நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இரவு பற்றிய பதிவுகளில், இரவு எவ்வாறு ஒரு இடத்தின் தோற்றத்தை மாற்றுகிறது; அந்த மாற்றம் பயணியின் மனநிலையை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் தனிமை மற்றும் அந்நியத்தன்மை குறித்த உணர்வுகளையும் நுட்பமாகத் தனது பயண இலக்கியங்களில் பதிவு செய்துள்ளார். எஸ். ராமகிருஷ்ணனின் இரவு சார்ந்த பயணப் பதிவுகளில் பின்வரும் கூறுகளை ஆராயலாம்.

- இரவும் அந்நியத்தன்மையும்: அறிமுகமில்லாத இடத்தில் இரவைக் கழிப்பதால் ஏற்படும் உளவியல் அனுபவங்கள்.
- இரவும் மனநிலையும்: இரவு நேரச் சூழல் உருவாக்கும் அச்சமும் பாதுகாப்பின்மையும் அது சார்ந்து பயணியின் சிந்தனையிலும் உணர்வுகளிலும் ஏற்படும் மாற்றங்கள்.

- இரவும் இடமும்: இருளில் தெருக்கள், பேருந்து, தொடர்வண்டி நிலையங்கள், தங்குமிடங்கள் போன்றவை முற்றிலும் வேறாகக் காட்சி அளிக்கும் தன்மை.
- இரவும் நினைவும்: பயணத்தின் போது கடந்தகால அனுபவங்கள் நினைவுக்கு வரும் விதம்.

இரவும் அந்நியத்தன்மையும்

பகல் நேரத்தில் ஒரு பயணி காணும் இடமும், இரவில் அதே இடத்தை அனுபவிக்கும் விதமும் வேறுபடுகின்றன. பகலில் பரபரப்பாகத் தோன்றும் நகரம், இரவில் அமைதியானதாகவோ அச்சமூட்டுவதாகவோ மாறலாம். தெருக்கள், ரயில் நிலையங்கள், தங்கும் விடுதிகள், சாலையோரங்கள் போன்ற இடங்கள் இரவு நேரத்தில் புதிய உணர்வுகளை உருவாக்குகின்றன. தேசாந்திரி நூலில் 'அறிந்த ஊர்' என்ற கட்டுரையில் பின்னிரவைப் பற்றி விவரிக்கும் போது ,

பின்னிரவில் எல்லா ஊர்களும் ஒன்று போலத்தான் இருக்கின்றன. அதிலும் பேருந்து நிலையங்களும் அதைச் சுற்றிலும் உள்ள சிறு கடைகளில் எரியும் டியூப் லைட்டுகள் மற்றும் பாதி உறக்கம் பீடித்த பெட்டிக்கடைகள், காலியான நாற்காலி களுடன் பால் கொதிக்கும் டீக்கடைகள், உறக்கத்தின் பிடியில் சுருண்டு கிடக்கும் வயதானவர்கள், கால்கள் மட்டும் வெளியே தெரிய உறங்கும் ஆட்டோக்காரர் என எல்லா நகரங்களும் பின்னிரவில் ஒரே சாயலுடன் இருக்கின்றன. (தேசாந்திரி, ப. 95)

'அறிந்த ஊர்' என்ற கட்டுரையில் சென்னையின் இரவை நுட்பமாகக் காட்சிப் படுத்தியுள்ளார். இதனை, ***அண்ணாசாலை மிக நீண்டதாகவும் மிக அழகானதாகவும் தெரிந்தது. நடக்க நடக்க சென்னை, நான் இதுவரை பார்க்காத நகரைப் போன்று இருந்தது. வழியில் குல்பி ஐஸ் விற்கும் ஒரு ஆள் செருப்பை இழுத்து இழுத்து நடந்தபடியே ராயப்பேட்டை நோக்கிப் போய்க்கொண்டு இருந்தார். சினிமா விளம்பரங்கள், நியான் வெளிச்சங்கள் யாவும் அப்படியே இருந்தன. சாலை ஓரங்களில் மரங்கள் இருப்பது அப்போதுதான் கண்ணில் பட்டது. கோடம்பாக்கம் வழியாக நடந்து போனபோது ரோந்து சுற்றும் காவல் வாகனங்கள் கூட சலனமற்று நின்றிருந்தன. வழியில் திறந்திருந்த ஒன்றிரண்டு கடைகளைத் தவிர, நகரம் துயிலின் நீள்பரப்பில் மூழ்கி இருந்தது. புதிர் கட்டங்கள் அவிழ்த்துச் சிதறிக்கிடப்பது போலத்தான் சென்னை இருக்கிறது என்று தோன்றியது***. (தேசாந்திரி, ப.99)

மேற்கண்ட வருணனைப் பகுதியில் இரவின் தனிமை, தூக்கமின்மை, மற்றும் இரவில் விழித்திருப்பவர்களின் உலகம், பகலில் பர பரப்பாக இருக்கும் உலகம் இரவில் வேறாகக் காட்சி அளிக்கும் தன்மை பற்றி விரிவாகப் பேசியுள்ளார்.

இரவும் மனநிலையும்

'சந்தேகத்தின் நிழல்' கட்டுரையில், ரிஷிகேசிலிருந்து டெல்லிக்கு இரவு பேருந்தில் வந்த அனுபவத்தை ஆசிரியர் மிக நுட்பமாக விவரிக்கிறார். ஆசிரியரை மிகப்பெரிய

உளவியல் சிக்கலுக்கு உள்ளாக்கிய பயணஅனுபவமாக அது அமைந்திருந்தது. பிளாஸ்டிக் பாட்டிலில் தண்ணீர் வைத்திருந்ததை ராணுவ அதிகாரி சந்தேகக் கண் கொண்டு பார்த்து, சோதனை செய்த பின்பு, அதைக் கீழே கொட்ட சொல்லி இருக்கிறார். இந்தச் சம்பவத்தை விவரிக்கும் ஆசிரியர் இப்படி முடிக்கிறார்.

பாட்டிலில் இருந்த தண்ணீரை கீழே ஊற்றச் சொன்னார். கீழே ஊற்றியபிறகு பேருந்து புறப்பட்டது. ஆனாலும் டெல்லி வந்து சேரும் வரை சக பயணிகள் என்னைச் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே வந்தார்கள். இப்படித்தான் இருக்கிறது இன்றைய பயணம். கரையானைப் போல எல்லா நகரங்களையும் பயம் அரித்துக் கொண்டு இருக்கிறது.(தேசாந்திரி, ப. 121)

இதேபோல, குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் நிகழ்ந்த சம்பவத்தை விவரிக்கும் ஆசிரியர்,***அன்றிரவு ஒரு மருத்துவமனைக்குள் கலவரக்காரர்கள் புகுந்து அங்கிருந்த நோயாளிகள் சிலரை அடித்துத் துரத்தி விட்டார்கள் என்று பேசிக்கொண்டார்கள். அதை நிஜமாக்குவது போலவே வயதான ஆட்கள் சிலர் இருளில் தெறித்து ஓடிக்கொண்டு இருந்தார்கள். இரவு முழுவதும் நகரம் இலக்கற்ற வன்முறையில் மிதந்து கொண்டு இருந்தது. அதிலும் அதிகம் கண்காணிக்கப்படுகிறவர்கள் இரவில் பயணம் செய்பவர்கள் தான். ரயில் நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் காத்திருக்கும் போது சந்தேகத்தின் கண்கள் உடலில் உறிந்து கொண்டே இருக்கிறது நம்மை அறியாமல் பயம் நம்முடலில் அட்டையைப் போல ரத்தம் குடிக்க தொடங்கி விடுகிறது.*** (தேசாந்திரி, ப.122) என்று இரவுப் பயணமும் தனிமையான இரவும் பயணிகளுக்கு எவ்வாறான மன அழுத்தத்தினை உருவாக்குகிறது என்பதனை விளக்குகிறார். இதில் '*கரையானைப் போல எல்லா நகரங்களையும் பயம் அரித்துக் கொண்டு*' , '*பயம் நம்முடலில் அட்டையைப் போல ரத்தம் குடிக்கத் தொடங்கி விடுகிறது*' என்ற தொடர்கள் நுட்பமான பயணப் பதிவுகளாக விளங்குகின்றன.

அமைதியும் தனிமையும்

பகலில் இருக்கும் இரைச்சலும் அலட்டலும் அடங்கி, இரவு துவங்கும்போது வெளியுலகம் சுருங்கி, ஆழ்மன சிந்தனைகள் அகலமாகின்றன. இரவு, தனது பேரமைதியில் மனிதர்களை அமைதிப் படுத்தவும் உறங்க வைக்கவும் சக்தி கொண்டுள்ளது. பகலில் அந்நியமாகத் தெரியும் இடங்கள் கூட, இரவின் நிலவொளியிலோ அல்லது மங்கலான விளக்குகளிலோ முற்றிலும் புதியதொரு கவித்துவத் தோற்றத்தைப் பெறுகின்றன. இதனை,

இதுபோல் பின்னிரவில் காலியான பேருந்து நிலையங்களில் விழித்துக் கிடப்பதற்கென்றே சிலர் இருக்கிறார்கள் போலும்! எல்லா பேருந்து நிலையங்களிலும் அதுபோலச் சிலரைக் கண்டிருக்கிறேன். கிழிந்த துணிகளைத் தைத்தபடியோ, குழாயில் தண்ணீர் பிடித்தபடியோ தங்கள் உறக்கத்தைத்

தொலைத்து விடுகின்ற அவர்கள் எல்லா ஊர்களிலும் இருக்கிறார்கள். (தேசாந்திரி, ப. 96)

உண்மையில், பின்னிரவு உலகுக்கு அழகை உருவாக்குகிறது. பகலின் வெக்கையால் ஊர்களின் மீது படிந்திருந்த உஷ்ணத்தை, சுருக்கங்களை இரவு சுத்தம் செய்கிறது. ஒரு தாதி குழந்தையைக் குளிப்பாட்டித் துடைத்து எடுப்பது போன்று இரவின் கைகள் உலகைச் சுத்தம் செய்கின்றன. பின்னிரவில் நிழல் கோடுகள்போலத் தெரியும் ஊர்கள் எப்போதுமே மயக்கமூட்டுவதாக இருக்கின்றன.(தேசாந்திரி, ப.97) என்ற பகுதியின் மூலம் அறியலாம். மேற்கண்ட செய்தியோடு ஒப்பு நோக்கும் தன்மையில்

எல்லா நகரங்களும் உயரத்திலிருந்து பார்க்கும்போது மிக அழகாகவே தெரிகின்றன. அதிலும் பின்னிரவில் மின்மினி பறப்பது போல ஆங்காங்கே வெளிச்சம் கலைந்து சிதறிக்கிடக்க, மொத்த நகரமும் துயிலின் கரங்களுக்குள் ஒடுங்கியிருக்கும். சிவப்பு எறும்புகள் ஊர்ந்து செல்வதைப் போல வெளிச்சத்தை உமிழ்ந்தபடியே செல்லும் வாகனங்கள், காலியான சாலைகள், சோடியம் விளக்குகள், சலனமற்ற அடுக்குமாடிக் குடியிருப்புகள், நட்சத்திரங்கள் நிரம்பிய ஆகாசம் எனப் புறத்தோற்றம் மயக்கமூட்டுவதாக இருக்கும்.(தேசாந்திரி, ப.209,210) என்ற பகுதிகள் விளக்குகின்றன.

இரவும் நினைவும்

பயணங்கள் என்பது வெறும் புதிய இடங்களைப் பார்ப்பது மட்டுமல்ல, இரவின் அமைதியில் அந்நிய நகரங்களிலோ அல்லது கிராமங்களிலோ தங்கும்போது மனிதர்கள் தங்களைச் சந்தித்துக்கொள்ளும் தருணமாக இரவு அமைகிறது. நாம் கற்பனை செய்வதைத் தாண்டி இரவின் முகம் அமைந்துள்ளது. தேசாந்திரி நூலில் 'உறங்கும் கடல்' என்ற தலைப்பிட்ட கட்டுரையில் டிசம்பர் மாத இரவினை நூலாசிரியர் நுட்பமாக வருணனை செய்துள்ளார். இதனை, ***டிசம்பர் மாதத்து இரவுகள் மிக அற்புதமானவை. வசந்த காலத்தில் பூமியெங்கும் பூக்கள் நிரம்புவது போல டிசம்பர் மாதத்து இரவுகளில் நட்சத்திரங்கள் பூத்துச் சொரிகின்றன. அன்றைக்கும் வான் நிறைய நட்சத்திரங்கள், தொலைவில் கேட்கும் நாய்க்குரைப்பின் ஓசையும் மெல்லிய கடலின் சப்தமும் விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டு இருந்தன. இந்து மகா சமுத்திரமும் வங்காள விரிகுடாவும் சங்கமிக்கும் இடம் தனுஷ்கோடி என்கிறார்கள். இரண்டு கடல்கள் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்வதால்தானோ என்னவோ, ஒரு ஆழ் நிசப்தம் கூடியிருக்கிறது*** (தேசாந்திரி, ப.222) என்ற பகுதியின் மூலம் அறியலாம்.

மேற்கண்ட செய்தியோடு ஒப்பு நோக்கும் வகையில் இலக்கற்ற பயணி நூலில், ***பள்ளி நாட்களிலிருந்து இன்று வரை பலமுறை தனுஷ் கோடிக்குச் சென்றிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அது தனித்த அனுபவமாகவே இருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு புதுவருடப் பிறப்பின் இரவில் விடியும்வரை***

தனுஷ்கோடியில் இருந்தேன். கடலுக்கும், இருளில் புதைந்த மனிதர்களுக்கும் வாழ்த்து சொல்லிப் பிறந்தது அந்தப் புதுவருடம். பின்னிரவில் தனுஷ்கோடி கொள்ளும் அழகு ஒப்பற்றது. அது மணப்பெண்ணின் வசீகரம் போன்றது. அந்தப் புதுவருடக் கொண்டாட்டம் அற்புதமானது.(இலக்கற்ற பயணி, ப. 120) என்று தனுஷ் கோடியின் இரவுக் காட்சியை நுட்பமாகக் காட்சிப் படுத்துகிறார்.

இதே போன்ற மற்றொரு பதிவை 'ஆதலினால்' நூலில் 'கடலறியாத மீன்கள்' கட்டுரையில் காட்சிப் படுத்துகிறார், இதனை, ***நான் எனது பத்துவயதில் மாடு விற்க கொண்டு செல்கின்ற மாட்டுத் தரகர்களுடன் நடந்தே மாட்டுச்சந்தைக்குச் சென்றிருக்கிறேன். இருபது மைல் தூரம். செம்மண் பாதை. விட்டுவிட்டு தென்படும் புளியமரங்கள் அடர்ந்த சாலைகள், இரவில் துவங்கிய பயணம் விடிகாலை வரை செல்லும். இருளுக்குள் கேட்கும் பூச்சிகளின் சப்தங்கள், பயமுறுத்தும் நிழல்கள், மாடுகளின் சீரான நடையோசை. மாடு விற்கும் தரகர்கள் வழியெங்கும் கதை சொல்லியபடியே வருவார்கள்.***

சில நேரங்களில் பேச்சு நின்று போய் நுரைதள்ளும் இருளும் அதில் ஒளிரும் நட்சத்திரங்களும் ஒளிந்து வெளிப்படும் நிலவும் யாருமற்ற பாதையுமாகப் பயணம் தொடரும். அந்த வேளையில் சிறுவனான எனக்கு உலகம் எவ்வளவு பெரியது என்று வியப்பாக இருக்கும்.(ஆதலினால், ப.115) என்ற பகுதியின் மூலம் அறியலாம். மேற்கண்ட பதிவுகளில், ஆசிரியர் சிறுவனாக இருந்தபோது, இரவு தந்த அனுபவத்தையும் வளர்ந்த பிறகு தனுஷ் கோடியில் வெவ்வேறு தருணங்களில் இரவு தந்த அனுபவத்தையும் நுட்பமாகக் காட்சிப் படுத்துகிறார்.

தமிழகத்து இரவுகளைப் பற்றி விவரிக்கும் ஆசிரியர் வெளிநாட்டு இரவுகளையும் அவை தரும் மயக்கத்தையும் காட்சிப்படுத்தத் தவறவில்லை. ***டைம் ஸ்கொயரில் நடந்தேன். மக்கள் இரவைக் கொண்டாடுகிறார்கள் இசையும் ஆட்டமும் பாட்டுமாகச் சந்தோஷம் அலை பாய்கிறது. தொலைக்காட்சி முன்பாக மட்டுமே இரவைக் கழிக்கும் நம்மூரை நினைத்துக் கொண்டபோது வருத்தமாகவே இருந்தது. இளமையின் துடிப்பை கொண்டாட்டத்தை மகிழ்ச்சியை காண ஒரு முறையாவது டைம் ஸ்கொயர் போய் வர வேண்டும் அந்த வீதி மகிழ்ச்சியால் நிரம்பி இருக்கிறது வண்ண விளக்கும் ஒளி நம் மீது படரும்போது கனவில் மிதப்பது போலவே இருக்கிறது. (தேசாந்திரி,***பக் 62, 63) மேற்கண்ட செய்தியோடு ஒப்பு நோக்கும் தன்மையில், **அபுதாபி ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரமாகவும் நாட்டின் இரண்டாவது** ***பெரிய நகரமாகவும் உள்ளது. காரில் அபுதாபியினுள் நுழைந்தேன். தொலைவிலிருந்து பார்க்கும்போது கிராண்ட் மாஸ்க் அலங்கார ஒளி விளக்குகளால் கனவு போல ஒளிர்ந்து கொண்டிருந்தது. (தேசாந்திரி,***ப.82) என்ற செய்தியையும் விளக்குகிறார். மேற்கண்ட பயணக் குறிப்புகளில் இரவுகள் எப்போதும் கனவுகள், கடந்த கால நினைவுகள், மற்றும் மனிதனின் இருப்பு பற்றிய எண்ணங்களை எழுப்புவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தனி மொழி - புனைவு மொழி

தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல அல்லது தன்னுடைய மனதிற்கு சொல்லிக் கொள்வது போல, முற்றிலும் மாறுபட்ட ஒரு மொழி நடையை சில இடங்களில் ஆசிரியர் பயன்படுத்தி உள்ளார். இது போன்ற 'புனைவு மொழி நடை' இரவு பற்றிய விவரிப்பாகவும் வர்ணனையாகவும் அமைகிறது. இது போன்ற தனிமொழி சார்ந்த புனைவு மொழி நடையில் வாழ்வியல் தத்துவங்களை மிக எளிய சொற்களில் ஆசிரியர் விளக்கிச் செல்கிறார். இதனை, ஆசிரியர் தனித்த உத்தியாகவே பயன்படுத்துகிறார்.'***பின்னிரவில் எல்லா ஊர்களும் ஒன்று போலத்தான் இருக்கின்றன'***, '***பகலின் வெக்கையால் ஊர்களின் மீது படிந்திருந்த உஷ்ணத்தை, சுருக்கங்களை இரவு சுத்தம் செய்கிறது'*** , '***பின்னிரவில் நிழல் கோடுகள் போலத் தெரியும் ஊர்கள் எப்போதுமே மயக்கமூட்டுவதாக இருக்கின்றன'***, ***பின்னிரவில் தனுஷ்கோடி கொள்ளும் அழகு ஒப்பற்றது. அது மணப்பெண்ணின் வசீகரம் போன்றது'*** , '***தொலைக்காட்சி முன்பாக மட்டுமே இரவை கழிக்கும் நம்மூரை நினைத்துக் கொண்ட போது வருத்தமாகவே இருந்தது***'ஆகிய தொடர்களை வாசிக்கும் போது நூலாசிரியரின் இரவு பற்றிய புனைவு மொழி நடையானது நேரடி வருணனை போல அமைந்து, நம்மையும் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குப் பயணம் செய்யத் தூண்டுகிறது.

தொகுப்புரை

எஸ். ராமகிருஷ்ணன் தமது பயணஇலக்கியங்களில், செல்லும் இடம், இரவு வருணனை, அங்கு நிகழ்ந்த அகப்புற மாற்றங்கள், சந்தித்த மனிதர்கள் அவர்களுடனான இனிய நிகழ்வுகள் ஆகியவற்றைத் தனது பயணப் பதிவுகளில் நுட்பமாகக் குறிப்பிட்டுள்ளார். இரவு பற்றிய பயணப் பதிவுகளில், பன்முகப் பரிமாணத்துடன் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறந்த வருணனையை - மொழிநடையைப் பதிவு செய்துள்ளார். அது கூற விழையும் செய்திகளைத் தத்துவம் கலந்து கூறுவதாக அமைகிறது. இதற்கு நூலாசிரியரின் நீண்ட பயண அனுபவம் முதன்மைக் காரணியாக விளங்குகிறது. மேற்கண்ட ஆய்வு முடிவின் வழி, இரவு பற்றிய பயணப் பதிவுகளும் புனைவு மொழி நடையும் மேலும் விரிவான ஆய்வுக்கு உரியதாகும்.

துணை நூற்பட்டியல்

1. ஞானபுஷ்பம்,இரா. தமிழில் பயணஇலக்கியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1990.
2. மோகனா, இரா. பயணஇலக்கியம் ,மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,2006.
3. ராமகிருஷ்ணன், எஸ். ஆதலினால், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, 2023.
4. ராமகிருஷ்ணன், எஸ். இலக்கற்ற பயணி , தேசாந்திரி பதிப்பகம், சென்னை, 2023.
5. ராமகிருஷ்ணன், எஸ். தேசாந்திரி, தேசாந்திரி பதிப்பகம், சென்னை, 2022.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

References

Gnanapushpam, R. Tamilil payana ilakkiyam, Ainthinai Pathippagam,Chennai, 1990.

Mohana, R.Payana ilakkiyam,Meyyappan Pathippagam, Chidambaram, 2006.

Ramakrishnan, S., Aathalinaal, Desenthiri Pathippagam, Chennai, 2023.

Ramakrishnan, S., Ilakkatra Payani, Desenthiri Pathippagam, Chennai, 2023.

Ramakrishnan, S., Desanthiri, Desenthiri Pathippagam, Chennai, 2022.